16.ஐப்பசி.2021 பக்கங்கள் - 04







# தினப்புயல்

THINAPPUYAL

REGISTERED AS A NEWS PAPER AT THE DEP. of . N.A :- RBN/4/3/06







மலர்-02 Tel&Fax:- 0242227558, Hot line: 0711850885. Email:thinappuyal2014@gmail.com, www.thinappuyalnews.com இதழ் - 37

# கிழக்கின் 'மண் கொள்ளையர்கள்'

## ஆதாரங்களுடன் பாராளுமன்ற உறுப்பினர் சாணக்கியன்

### தினப்புயல் பத்திரிகைக்கு வழங்கிய சிறப்பு நேர்காணல்



**கேள்வி: மாகாண சபைத் தேர்தல் இடம்பெறவிருப்பதாக அறிவிப்புக்கள் வெளியாகியிருக்கிறது. எனவே எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலை நீங்கள் எவ்வாறு பார்க்கிறீர்கள்?**

பதில்: மாகாணசபைத் தேர்தல் என்று கூறும்போது கிழக்கில் கடந்த மாகாண சபைத் தேர்தல் நடைபெற்று சுமார் பத்து வருடங்கள் ஆகப்போகிறது. 2012ஆம் ஆண்டுக்குப் பின்னர் இதுவரை மாகாண சபைத் தேர்தல் கிழக்கில் நடைபெறவில்லை. ஆனால் இன்று கிழக்கில் மாகாண சபைத் தேர்தலது அவசியத்தை நாம் உணரக்கூடியதாக இருக்கிறது. இல்லாத அதிகாரங்களை விட. மாகாண சபைக்கென்று இருக்கின்ற அதிகாரங்களாவது இருந்தால் சில விடயங்களையாவது நாம் வெற்றிகொள்ளலாம் என்கிற நிலைப்பாடு இருக்கிறது. (03)

# புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியீடு

நேற்று நள்ளிரவு முதல் தொடக்கம் எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 31 ஆம் திகதி வரை பொது நடவடிக்கைகளை எவ்வாறு மேற்கொள்வது என்பது குறித்து அரசாங்கத்தினால் சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தனவினால் இந்த சுகாதார வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. நாட்டினுள் கொவிட் பரவல் கட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் குறிப்பிடத்தக்க அளவில் கொவிட் பரவல் இன்னும் காணப்படுவதாக சுகாதார அமைச்சு குறிப்பிட்டுள்ளது. அதன்படி. வர்த்தக நிலையங்கள். சில்லறை வர்த்தக நிலையங்கள். மருந்தகங்கள். சிறப்பு அங்காடிகள் மற்றும் வீட்டுப் பொருள் விற்பனை நிலையங்கள் என்பனவற்றில் ஒரு சந்தர்ப்பத்தில் மொத்த கொள்ளளவில் 20 சதவீதமானோருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்படவேண்டும். குறித்த இடங்களில் அனுமதிக்கக்கூடிய நபர்களின் எண்ணிக்கை வெளியே காட்சிப்படுத்தப்பட வேண்டும். (03)



# அனைத்து மாவட்ட மாணவர்களுக்கும் தடுப்பூசி ஏற்றத் தீர்மானம்



*கொழும்பு மாவட்டத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களான 18 - 19 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கைகள், நேற்று முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன தெரிவித்தார்.*

*நேற்று (15) முற்பகல், வீடியோ தொழில்நுட்பத்தின் ஊடாக இடம்பெற்ற கொவிட் ஒழிப்புச் செயலணிக் கூட்டத்தில் கலந்து கொண்டு அவர் இதனை தெரிவித்தார்.*

*தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர், அத்துடன், ஏனைய மாவட்டங்களிலுள்ள மேற்படி வயதுப் பிரிவைச் சேர்ந்த அனைத்துப் பிள்ளைகளுக்கும், இம்மாதம் 21ஆம் திகதி முதல், பாடசாலைகள் மற்றும் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாகத் தடுப்பூசி ஏற்றுவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (03)*

# தினப்புயல்,
## ஆசிரியர் பீடம்,
## இல.154, 6வது ஒழுங்கை,
## தேக்கவத்தை, வவுனியா.

## இலங்கையில் போதைப் பொருட்களின் பாவனை கடந்த காலங்களை விட தற்போது அதிகரிப்பு

இலங்கையில் போதைப்பொருட்களின் பாவனை என்பது நகரம் தொடங்கி கிராமம் வரை தற்போது விரிவுபடுத்தப்பட்டுள்ளது. இந்த வர்த்தகத்தில் இன்று நாட்டின் பலர் ஈடுபட்டுவருகின்றனர். சாதாரண மனிதர் தொடங்கி உயர் அந்தஸ்துள்ளவர்கள் கூட இன்று இத்தொழிலை செய்து வருகின்றனர். அரசினால் பல வேலைத்திட்டங்கள் போதைப்பொருள் ஒழிப்பிற்காக மேற்கொள்ளப்பட்டாலும் நாட்டில் போதைப்பொருட்களின் பாவனை குறைந்தபாடில்லை. இலங்கைக்கு வெளிநாடுகளில் இருந்தும் போதைப்பொருட்கள் கொண்டுவரப்பட்டவண்ணம் உள்ளன. விமான நிலையங்கள் மற்றும் கடல் மார்க்கமாக எமது நாட்டிற்குள் இவை கொண்டுவரப்படுகின்றன. இன்று நாட்டின் பல இளைஞர்கள் இப் பழக்கத்திற்கு அடிமையானவர்களாக காணப்படுகின்றனர்.

இந்நிலையில் நேற்றைய தினம், கொகேய்ன் அடங்கிய உருண்டைகளை விழுங்கி இலங்கை வந்த உகண்டா பெண்ணொருவரை சுங்க அதிகாரிகள் கைது செய்துள்ள சம்பவமொன்று பதிவாகியுள்ளது. உகண்டாவிலிருந்து நேற்று (15) பிற்பகல் இலங்கைக்கு வந்த 45 வயதான குறித்த பெண் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து சுங்க அதிகாரிகளினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது அவர் விழுங்கிய கொகேய்ன் அடங்கிய 51 உருண்டைகள் மீட்கப்பட்டுள்ளதாக சுங்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கட்டுநாயக்க விமான நிலையத்தின் வெளியேறும் பகுதியில் வைத்து குறித்த பெண்ணிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது சந்தேகம் ஏற்பட்டதால் அவர் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

அதன்போது அவர் கொகேய்ன் அடங்கிய 100 உருண்டைகளை விழுங்கி உள்ளதாக குறித்த அதிகாரிகளிடம் தெரிவித்துள்ளார். இந்தச்சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகள், சுங்க திணைக்களத்தின் போதைப்போருள் கட்டுப்பாட்டு பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் காவல்துறை போதைப்பொருள் ஒழிப்பு பிரிவினரிடம் கையளிக்கப்பட்டுள்ளார். ஆகவே இன்னும் இலங்கையில் போதைப்பொருளை விரிவுபடுத்தும் நோக்குடன் தான் உலக போதைப்பொருள் மாபியாக்கள் செயற்பட்டு வருகின்றன. எனவே எமது நாட்டின் எதிர்கால சந்ததியினரைப் பாதுகாக்கவேண்டிய கடப்பாடு அரசுக்கு இருக்கிறது என்பதை உணர்ந்து இன்னும் நாட்டில் சட்டங்களும், ஒழிப்பு வேலைத்திட்டங்களும் கடுமையாக அமுல்ப்படுத்தப்படவேண்டும்.

**நேற்றைய தினம் (15.10.2021) 20 பேர் மரணித்துள்ளனர். அதனடிப்படையில் மொத்த மரணங்களின் எண்ணிக்கை 13,449 ஆகும். 666 பேர் தொற்றாளர்களாக அடையாளங் காணப்பட்டதோடு, மொத்த தொற்றாளர்களின் எண்ணிக்கை 530,421 ஆக உயர்வடைந்துள்ளது.**

## சிறுவர்களுக்கு பாடசாலைக்குள் கல்விக்கான வள இருப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு

*(மாளிகைக்காடு நிருபர்)*

கல்வி அமைச்சின் சுற்று நிருபத்திற்கமைவாக தரம் 06 முதல் உயர்தர வகுப்புக்களைக் கொண்ட அனைத்து பாடசாலைகளிலும் பாடசாலை சிறுவர் பாதுகாப்புக் குழுக்களைத் தாபித்தல் மற்றும் வலுவூட்டுதல் - 2021 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அனுசரணையுடன் இடர்வரு நிலையிலுள்ள சிறுவர்களுக்கு பாடசாலைக்குள் கல்விக்கான வள இருப்புக்களைப் பெற்றுக் கொடுக்கும் நிகழ்வு வெள்ளிக்கிழமை (15) பொத்துவில் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் செல்வி.வு.திவ்வியாவின் ஏற்பாட்டில் உதவி பிரதேச செயலாளர் பிர்னாஸ் இஸ்மாயிலின் தலைமையில் பொத்துவில் கல்வி வலயம் மற்றும் திருக்கோவில் கல்வி வலயங்களுக்குட்பட்ட 05பாடசாலைகளின் பங்கு பற்றுதலுடன் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் பொத்துவில் பிரதேச செயலக நிருவாக உத்தியோகத்தர் எம்.எஸ்.எம். சுபையிர், அக்கரைப்பற்று வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் கலாநிதி ஹனிபா இஸ்மாயில், திருக்கோவில் கோட்ட பிரதி கல்விப் பணிப்பாளர் கே.கங்காதரன், ஆசிரிய ஆலோசகர் எம்.எஸ். முபாரக் மற்றும் 05பாடசாலைகளின் அதிபர்கள், பாடசாலை மாணவர் ஆலோசனைப் பணிக்காக நியமிக்கப்பட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





## பசுமை விவசாயத்திற்கு 14 பேர் கொண்ட குழு ஒன்று நியமிப்பு



ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 14 பேர் கொண்ட குழு ஒன்றை பசுமை விவசாயத்துக்காக நியமித்துள்ளார்.

அதனுடன் தொடர்புடைய விசேட வர்த்தமானி அறிவித்தல் ஜனாதிபதி செயலாளர் பி.பீ.ஜயசுந்தரவினால் கைச்சாத்திடப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

14 பேர் அடங்கிய குறித்த ஜனாதிபதி செயலணியின் தலைவராக விஜித் வெலிகல நியமிக்கப்பட்டுள்ளார்.

செயலணியின் ஏனைய உறுப்பினர்களாக லலித் சேனவிரத்ன, கசுன் தாரக அமல், மாலிந்த சேனவிரத்ன, ரசிக துசித குமார, கலாநிதி பி.கே.ஜி காவந்திஸ்ஸ, சமந்த பெர்னாண்டோ, சமுதித குமாரசிங்க, அஜித் ரண்தூனு, என்.எம் கலீட், ஷம்மி கிரிண்தே, நிர்மலா கரவ்கொட, சமிந்த ஹெட்டிகன்கானம்கே மற்றும் நிஷான் டி சில்வா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## அடிப்படை வசதிகளற்ற கிராமத்தை நோக்கி நகர்ந்த மாஹீரின் மக்கள் பணி

*(மாளிகைக்காடு நிருபர்)*

இறக்காமம், குடிவில் பிரதேச அறபா நகரில் சுமார் 33 குடும்பங்கள் எந்தவித அடிப்படை வசதிகளுமின்றி மிகவும் பின்தங்கிய நிலையில் வாழ்ந்து வருகின்றனர். அந்த பிரதேசத்தில் பாலர் பாடசாலை ஒன்றின் தேவை நீண்டகாலமாக உணரப்பட்டிருந்த நிலையில், முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஐ.எல். எம்.மாஹிர் மற்றும் குடும்பத்தார் ஆகியோரின் பங்களிப்பினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட பாலர் பாடசாலையைத் திறந்து வைக்கும் உத்தியோகபூர்வ நிகழ்வு வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

மேலும் இந்நிகழ்வில் பாலர் பாடசாலைக்குத் தேவையான தளபாடங்கள், கற்றல் உபகரணங்களும் வழங்கப்பட்டதோடு ஆசிரியை ஒருவரும் நியமிக்கப்பட்டு அவருக்கு ஒரு குறிப்பிட்ட தொகை சம்பளத்தினை மாதா மாதம் வழங்கவும் ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டுள்ளது. இந் நிகழ்வில் ஐ.எல்.எம்.மாஹிர், தொழிநுட்ப



அதிகாரி ஏ.ஆர்.இர்ஷாட், குடிவில் பிரதேச கிராம நிலதாரி எம்.ஜே.எம். அத்தீக், மீனவர் சங்கத் தலைவர் சப்றாஸ், அறபா நகர் தலைவர் அமீன் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

தங்களால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு இணங்க மிக விரைவாக பாலர் பாடசாலை அமைத்துக் கொடுத்து அதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்து கொடுத்த ஐ.எல்.எம்.மாஹிர் அவர்களுக்கும் இவ் வேலைத் திட்டங்கள் முழுமையடைய பாடுபட்ட தொழிநுட்ப அதிகாரி ஏ.ஆர்.இர்ஷாட் அவர்களுக்கும் குடிவில் பிரதேச அறபா நகர் மக்கள் இதன்போது நன்றிகளைத் தெரிவித்துக்கொண்டனர்.

## அதுரலியே ரதன தேரர் கட்சியில் இருந்து நீக்கம் - தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிப்பு




முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் வண. அதுரலியே ரதன தேரர் அபே ஜனபல கட்சியில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவிக்கப்பட்டுள்ளது. தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் இதனை தெரிவித்துள்ளார்.

வண.அதுரலியே ரதன தேரரை கட்சியில் இருந்து நீக்குவதாக குறிப்பிட்டு அக்கட்சியின் பொதுச் செயலாளரால் கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா குறிப்பிட்டுள்ளார்.

## காற்றின் வேகமானது ஒக்டோபர் 17ஆம் திகதி வரை அதிகரிக்கும்

மேல், சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் அவ்வப்போது மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகின்றது. வடமேல் மாகாணத்தில் பல தடவைகள் மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய, வடமேல் மற்றும் தென் மாகாணங்களிலும் திருகோணமலை மாவட்டத்திலும் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரை அதிகரிக்கக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. நாட்டைச் சூழவுள்ள ஆழம் கூடிய மற்றும் ஆழம் குறைந்த கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது இன்று முதல் ஒக்டோபர் 17ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடலில் பயணம் செய்வோரும் மீனவ சமூகமும் இவ்விடயம் தொடர்பாக அவதானமாக இருக்குமாறு வேண்டிக்கொள்ளப்படுகிறீர்கள்.

# கிழக்கின் மண்...

இன்று கிழக்கின் ஆளுநர் தன்னிச்சையாக சர்வாதிகாரப்போக்கில் தனது சிந்தனையை கிழக்கில் திணிக்கும் போக்குடன் செயற்பட்டு வருகின்றார். அதேவேளை கிழக்கின் உயர் பதவிகளில் இருக்கும் அதிகாரிகள் கூட கிழக்கில் பெரும்பான்மையாக வாழும் தமிழ் மக்களது நலன் தொடர்பில் சிந்திக்காது அரசின் நிகழ்ச்சிநிரலில் அவர்களது செயற்பாடுகள் இருப்பதை அவதானிக்க முடிகிறது. கிழக்கைப் பொறுத்தவரை மாகாண சபைத் தேர்தல் விரைவில் நடந்தால் நல்லது என நான் நம்புகின்றேன். ஆனால் கடந்த காலங்களில் மாகாண சபைத் தேர்தல் நடக்கப்போவதாக கதைகள் வரும். பின்னர் காரணங்களைக் காட்டி பிற்போடப்படும். தற்போது மீண்டும் மாகாண சபைத் தேர்தல் நடைபெறப்போவதாகக் கூறப்படுகிறது. சில அறிகுறிகள் இருக்கிறது. 2022 ஆம் ஆண்டின் வரவுசெலவுத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கு அடுத்த படியாக உள்ளூராட்சி அமைச்சுக்கு அதிகூடிய நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்திய வெளியுறவுத் துறை செயலரது வரவு அதாவது மாகாண சபைத் தேர்தல் நடக்கலாம் என ஊகிக்க முடிகிறது. தேர்தல் நடந்தால் வடக்கிலும் கிழக்கிலும் நாங்கள் ஆட்சி அமைப்போம்.

**கேள்வி: கிழக்கின் அரசியலில் ஆளுமையுள்ளவராக அனைவராலும் பார்க்கப்படும் ஒருவர் என்கிற ரீதியில் நீங்கள் எதிர்வரும் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடுவீர்களா எனக் கேட்டால் உங்களது பதில் என்னவாக இருக்கும்?**

பதில் : எமது பங்காளிக் கட்சிகள் இது தொடர்பில் கருத்துக்களை வெளியிட்டிருந்தார்கள். அதாவது, நான் முதல்வர் வேட்பாளர் என்று கூறமுடியாது அது கட்சிகள் இணைந்து எடுக்கின்ற முடிவு என்று. உண்மை தான் அது. அதனை நானும் ஏற்றுக்கொள்கின்றேன். கட்சிகளுக்குள் பேசித் தான் தீர்மானங்களை எடுக்கவேண்டும். எனினும் கிழக்கின் முதலமைச்சர் வேட்பாளராக போட்டியிடவேண்டும் என்கிற ஆசை எனக்கு இருக்கிறது.

**கேள்வி: கிழக்கில் வளங்கள் சுரண்டப்படுகிறது. மண் மாபியாக்கள் இருக்கின்றது. இவ்விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் பிள்ளையான். இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரனின் பெயர்களைக் குறிப்பிட்டு பாராளுமன்றில் உரையாற்றியிருந்தீர்கள். உண்மையில் இவர்களுக்கும் மண் மாபியாக்களுக்கும் தொடர்புகள் உண்டா? ஆதாரங்கள் உங்களிடம் இருக்கின்றதா?**

பதில் : கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் வந்த செய்தி. மஹிந்த அமரவீர என்பவர் தான் இதற்குப் பொறுப்பான அமைச்சர். அவர் கிழக்கிற்கு வந்தபோது மண் மாபியாக்கள் அல்லது மண் அனுமதிப்பத்திரங்கள் வரவேண்டியவர்கள் அவருடன் இரவில் சந்தித்திருக்கிறார்கள் என்ற செய்தி எனக்கு வந்தது. ஒரு அமைச்சரை இரவு சந்தித்தது என்பது சந்தேகத்தை வலுப்படுத்தியது. உடனடியாக நான் குறித்த அமைச்சரை தொலைபேசியில் அழைத்து, நீங்கள் கிழக்கிற்கு வந்திருப்பதாகவும் மண் அனுமதிப்பத்திரங்களை வழங்கவிருப்பதாகவும், மக்கள் ஆர்ப்பாட்டங்களைச் செய்யப்போவதாக எனக்கு அறிவித்திருக்கிறார்கள் என நான் அவரிடம் கூற, அவர் இல்லை அவ்வாறான ஆர்ப்பாட்டங்களை செய்யவேண்டாம். காலையில் அவரைச் சந்திக்குமாறு என்னிடம் தெரிவித்தார். அதனடிப்படையில் மண் அனுமதிப்பத்திரங்களை வழங்கும் அந்தக் காரியாலயத்தில் நான் அவரைச் சந்தித்தேன்.

இன்று மட்டக்களப்பிலே அகழ்கின்ற மண் மட்டக்களப்பில் ஒரு வீடு கட்டுவதற்கு கொள்வனவு செய்ய முடியவில்லை. விலைகள் அதிகரித்திருக்கிறது. அதனை கொழும்புக்கு ஏற்றினால் இலாபம் அதிகம் என்பதை அறிந்துகொண்டு இவ்வாறான மோசமான செயற்பாடுகள் கிழக்கில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. ஆற்றில் மண்ணால் அடைப்பு என நீர்ப்பாசன திணைக்களம் கூறினால் அதனை அப்புறப்படுத்துவதில் சிக்கல் இல்லை. ஆனால் வயல் திருத்தவேலை என அனுமதியைப் பெற்றுக்கொண்டு மண்ணை அகழ்கின்றனர். பாரிய கிடங்குகள் வெட்டப்பட்டு சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தல் ஏற்படுத்தப்படுகின்றது. இதனால் குடி தண்ணீர் வற்றுகின்றது. ஒரு நாளைக்கு 2000 ரூபாய் சம்பளம் என்பதனால் கல்வியைக் கைவிட்டுவிட்டு வேலைக்கு செல்பவர்களும் இருக்கிறார்கள். இப்படியாக பல பிரச்சினைகள் இன்று கிழக்கில் தலையெடுத்துள்ளது. பல கோணங்களில் இந்தப் பிரச்சினைகளைப் பார்க்கலாம். மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவர் என்பவர் பலம் வாய்ந்தவராக இருக்கவேண்டும். துணிச்சலானவராக இருக்கவேண்டும். இவ்வாறான பிரச்சினைகள் வருகின்றபோது உடனடித் தீர்மானங்களை எடுக்கவேண்டும். நான் அபிவிருத்திக் குழுத் தலைவராக இருந்தால் உடனடியாக அனுமதிப்பத்திரங்களை இரத்துச் செய்து தீர்மானங்களை எடுத்திருப்பேன். இன்று கிழக்கிலுள்ளவர்களைவிட தெற்கில் இருந்து வந்தவர்கள் தான் கிழக்கில் அதிக அனுமதிப்பத்திரங்களை வைத்திருக்கிறார்கள். நான் ஆதாரங்கள் இல்லாமல் பேசுவது குறைவு. ஆதாரத்துடன் பேசினால் தான் எந்தவிடயங்களும் கவனத்தில் எடுக்கப்படும். நீங்களே பார்க்கலாம். 94 பக்கங்களில் உள்ள இந்த ஆவணத்தில் 03 பக்கங்களை அடையாளப்படுத்தி நான் நிதியமைச்சரிடம் ஆதாரமாகக் கையளித்திருக்கின்றேன். அதாவது **முதலாவது பெயர் திரு.பி.சந்திரகுமார். மட்டக்களப்பின் மொட்டு அமைப்பாளர். அதாவது பரமசிவம் சந்திரகுமார் என்பவர். அடுத்த பெயர் S.மயூரன். மட்டக்களப்பில் இருக்கும் இராஜாங்க அமைச்சர் ஒருவரது சகோதரரின் பெயர் S.மயூரன். மார்க்கெட் வீதி செங்கலடி என முகவரி இருக்கிறது. இது நான் பொய்யாக கூறும் தரவுகள் அல்ல. உத்தியோகபூர்வமான ஆதாரங்கள். S.மயூரன் என்பவரின் பெயரில் அனுமதிப்பத்திரம் இருக்கிறது. அடுத்தது திரு.S.சந்திரகாந்தன். மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவரின் பெயர் S.சந்திரகாந்தன். அவரது அப்பாவின் பெயர் சிவனேசத்துரை சந்திரகாந்தன்.** குறித்த பெயரிலும் மண் அனுமதிப்பத்திரம் இருக்கிறது. பட்டியலில் இவ்வாறான பெயர்களுக்கு அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருக்கிறது.

**(நேர்காணல் – இரணியன்)** **(தொடரும்...)**

# புதிய சுகாதார வழிகாட்டுதல்கள்...

வங்கிகள், நிதிநிறுவனங்கள், அடகுபிடிப்புநிலையங்களில் ஒரு சந்தர்ப்பத்தில் 5 பேரை மாத்திரம் அனுமதிக்க முடியும் என்பதுடன் ஏனையோர் குறித்த இடங்களுக்கு வெளியே சமூக இடைவெளியை பேணியவாறு வரிசையில் நிற்க வேண்டும்.

வீட்டிலிருந்து தொழிலுக்காக, மருத்துவ தேவைகளுக்காக மற்றும் அத்தியாவசிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக வெளியே செல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வீட்டுக்குள் நடத்தப்படும் விருந்துபசார நிகழ்வுகள் உள்ளிட்ட அனைத்து வகையான உள்ளக மற்றும் வெளியக விருந்துபசாரங்களுக்கு தொடர்ந்தும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

திருமண மண்டபங்களில் 50 நபர்களுக்கு மேற்படாத வகையில் அல்லது மண்டப கொள்ளளவில் 25 சதவீதமானோரை உள்ளடக்கியதாகத் திருமண வைபவங்களை நடத்த முடியும்.

கட்டுமாண தளங்களின் பணிகளை சுகாதார வழிகாட்டல்களுக்கு அமைய முன்னெடுக்க முடியும்.

விவசாய நடவடிக்கைகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிகையலங்கார நிலையம், அழகுக்கலை நிலையங்களில் முன்பதிவு செய்துள்ள வாடிக்கையாளர்களுக்குச் சேவை வழங்க முடியும்.

திரையரங்குகளில் ஒரு சந்தர்ப்பத்தில் மொத்த கொள்ளளவில் 25 சதவீதமானோருக்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மரண சடங்குகளில் கலந்துகொள்ள ஒரே தடவையில் 20 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வழிபாட்டுத் தலங்கள், கூட்டு வழிபாடு மற்றும் கூட்டங்களுக்கு அனுமதி இல்லை.

பாடசாலைகளை திறப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

கல்வி அமைச்சின் தீர்மானத்துக்கு அமைய 200க்கும் குறைவான மாணவர்களின் எண்ணிக்கையைக் கொண்ட பாடசாலைகளை முதல் கட்டமாகத் திறக்க முடியும்.

பல்கலைக்கழகங்கள் மற்றும் உயர்கல்வி நிறுவகங்களை சுகாதார வழிகாட்டலுக்கு அமைய ஆரம்பிக்க முடியும்.

முன்பள்ளிகளை 50 சதவீத மாணவர் கொள்ளளவை கொண்டு முன்னெடுக்க முடியும்.

பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களைத் திறக்க அனுமதி.

பொருளாதார மத்திய நிலையங்கள் மொத்த விற்பனைக்காக அனுமதிக்கப்படுவதுடன், பிரதேச குழுக்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் அவை இயங்க வேண்டும்.

திறந்த சந்தைகள் மற்றும் வாராந்த சந்தைகள் என்பனவும் பிரதேச குழுக்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் இயங்க வேண்டும்.

உணவகங்களில் உணவு விநியோகத்திற்கு மாத்திரம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

நடமாடும் வர்த்தகங்கள் பிரதேச குழுக்கள் மற்றும் சுகாதார வைத்திய அதிகாரியின் கண்காணிப்பின் கீழ் இயங்கவேண்டும்.

# அனைத்து மாவட்ட...

சுகாதாரத் துறையினரின் பரிந்துரைகளுக்கு அமைவாக, பாடசாலை மாணவர்களுக்கு ஒரு டோஸ் தடுப்பூசியும் விசேட தேவையுடைய பிள்ளைகளுக்கு இரண்டு டோஸ் தடுப்பூசிகளும் செலுத்தப்படவுள்ளன.

இதேவேளை, பாடசாலை மாணவர்களுக்கான தடுப்பூசிகள் செலுத்தப்பட்ட பின்னர், சுகாதாரப் பரிந்துரைகளுக்கமைய, நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிப்பதற்கான மூன்றாவது டோஸ் (Booster) தடுப்பூசியைச் செலுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமையன்று, மேலும் 6 இலட்சம் ஃபைசர் தடுப்பூசிகள் கிடைக்கப்பெறவுள்ளன என்றும் கோரப்பட்டிருந்த தடுப்பூசிகள் தொடர்ந்து கிடைத்துக்கொண்டு இருக்கின்றன என்றும், கொவிட் தடுப்புச் செயலணியின் உறுப்பினரும் விசேட வைத்திய நிபுணருமான பிரசன்ன குணசேன தெரிவித்தார்.

# IPL 2021 - 4 ஆவது முறையாகவும் சென்னை அணி மகுடம் சூடியது



ஐபிஎல் மாபெரும் இறுதிப் போட்டியில் கல்கத்தா நைட் ரைடர்ஸ் அணியை 27 ஓட்டங்களால் வீழ்த்தி 4 ஆவது முறையாகவும் ஐபிஎல் கிண்ணத்தை மகேந்திர சிங் தோனி தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி சுவீகரித்து மகுடம் சூடியுள்ளது.

2021 ஐபிஎல் போட்டித் தொடரின் இறுதிப் போட்டி சென்னை சூப்பர் கிங்ஸ் மற்றும் கல்கத்தா நைட் ரைடர்ஸ் அணிகளுக்கு இடையில் நேற்று இடம்பெற்றது. போட்டியின் நாணய சுழற்சியில் வெற்றிப் பெற்ற கல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட சென்னை அணிக்கு அழைப்பு விடுத்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 192 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது. சென்னை அணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய டு பிளசிஸ் 59 பந்துகளில் 86 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். 3 ஆறு ஓட்டங்கள் மற்றும் 7 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக அவர் இந்த ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். ஆட்டமிழக்காமல் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்திய மொய்ன் அலி 37 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். ருதுராஜ் கெய்க்வாட் 32 ஓட்டங்களையும் ரொபின் உத்தப்பா 31 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்து வீச்சில் சுனில் நரேன் 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

இந்நிலையில் வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கல்கத்தா அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்கள் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய போதும் பின் வரிசை வீரர்கள் பிரகாசிக்காததால் 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 169 ஓட்டங்களை மாத்திரமே பெற்றுக் கொண்டது. அவ்வணி சார்பில் அதிரடியாக துடுப்பெடுத்தாடிய ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களான சுப்மான் கில் 51 ஓட்டங்களையும், வெங்கடேஷ் ஐயர் 50 ஓட்டங்களையும் அதிகபட்சமாக பெற்றுக் கொண்டனர். ஏனைய வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்து வெளியேறினர்.

ஒன்பதாவது விக்கெட்டுக்கு துடுப்பெடுத்தாடிய லோக்கி பெர்குசன் 18 ஓட்டங்களை ஆட்டமிழக்காது பெற்றுக் கொண்ட நிலையில் ஷிவம் மாவி அதிரடியாக துடுப்பெடுத்தாடி 13 பந்துகளில் 20 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். சென்னை அணி சார்பில் பந்து வீச்சில் ஷர்துல் தாக்குர் 3 விக்கெட்டுக்களையும், ஹேசில்வுட் மற்றும் ஜடேஜா தலா இரு விக்கெட்டுக்களை வீழ்த்தினர். இதற்கமைய, 2021 ஐபிஎல் கிண்ணத்தை சென்னை அணி நான்காவது முறையாகவும் கைப்பற்றி சாதனை படைத்துள்ளது.

# முழுமையாக தடுப்பூசி போட்ட வெளிநாட்டவர்களுக்கு அனுமதி - அமெரிக்கா அறிவிப்பு



வெளிநாட்டவர்களின் அத்தியாவசமற்ற பயணங்களுக்கு 18 மாதங்களாக இருந்த தடையை நவ.. 8 முதல் விலக்குகிறது அமெரிக்கா. முழுமையாக 2 டோஸ் கோவிட் தடுப்பூசி போட்ட ஐரோப்பா மற்றும் பிரிட்டன் நாட்டினர் விமானம் மற்றும் தரைவழிப் போக்குவரத்து மூலம் அமெரிக்காவுக்கு வருகை தரலாம் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

இது பற்றிய தகவலை அமெரிக்க பத்திரிகையாளர் ஒருவர் டுவிட்டரில் பகிர்ந்திருந்தார். அதனை வெள்ளை மாளிகை துணை செய்தித் தொடர்பாளர் கெவின் முனோஸ் உறுதிப்படுத்தியுள்ளார். தற்போதைய விதிகளின்படி, இங்கிலாந்து, ஐரோப்பிய ஒன்றியம், சீனா, இந்தியா, ஈரான் மற்றும் பிரேசில் ஆகிய நாடுகளில் இருந்து வருபவர்களை அமெரிக்காவிற்குள் அனுமதிப்பதில்லை.

இந்நிலையில் நவம்பர் 8 முதல் பிரிட்டன் மற்றும் ஐரோப்பிய நாடுகளிலிருந்து வரும் பயணிகளை சில கட்டுப்பாடுகளுடன் அமெரிக்கா அனுமதிக்க உள்ளது. அவர்கள் முழுமையாக தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும். அதற்கான ஆவணங்களை வைத்திருக்க வேண்டும். வருகைக்கு மூன்று நாட்களுக்கு முன்பு எடுத்த கோவிட் நெகடிவ் பரிசோதனை அறிக்கை இருக்க வேண்டும். பயணம் முழுக்க முகக்கவசம் அணிந்திருக்க வேண்டும். தொற்று ஏற்பட்டால் தொடர்பிலிருந்த நபர்களை கண்டறிவதற்காக மின்னஞ்சல் மற்றும் அலைபேசி எண்ணை தர வேண்டும் போன்ற கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

டோக்கியோ ஒலிம்பிக்ஸ் போட்டியில் இந்திய வீரர்கள் பதக்கம் வாங்கி குவித்ததை அடுத்து, 250 கோடி ரூபாய் செலவில் விளையாட்டு அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக்கான தேசிய மையத்தை திறக்க இந்திய மத்திய அரசு திட்டமிட்டு உள்ளது. கிழக்காசிய நாடான ஜப்பான் தலைநகர் டோக்கியோவில் சமீபத்தில் நடந்த ஒலிம்பிக்ஸ் போட்டியில் தங்கம் உட்பட ஏழு பதக்கங்களை நம் விளையாட்டு வீரர்கள் வென்றனர். மாற்று திறனாளிகளுக்கான போட்டிகளில் 5 தங்கம் உட்பட 19 பதக்கங்களை இந்திய வீரர்கள் வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கடந்த ஓராண்டில் ஒரு வாரத்தில் ஏற்பட்ட மிகக் குறைவான உயிரிழப்பு



உலக அளவில் கொவிட் தொற்றால் ஏற்பட்ட உயிரிழப்போர் எண்ணிக்கை கடந்த ஓராண்டில் இல்லாத அளவுக்கு கடந்த வாரத்தில் குறைந்துள்ளதாக உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

உலக சுகாதார அமைப்பின் செயலாளர் நாயகம் டெட்ரோஸ் அதானோம் கெப்ரியாசிஸ், வாராந்திர ஆய்வு குறித்து (14) அளித்த பேட்டியில் இதனை குறிப்பிட்டுள்ளார்.

உலக அளவில் கொவிட் பெருந்தொற்றால் உயிரிழப்போர் எண்ணிக்கை தொடர்ந்து குறைந்து வருகிறது. கடந்த வாரத்தில் உலக அளவில் 50 ஆயிரம் பேர் உயிரிழந்தனர். இது, கடந்த ஓராண்டில் ஒரு வாரத்தில் ஏற்பட்ட மிகக் குறைவான உயிரிழப்பு.

ஐரோப்பாவைத் தவிர்த்து உலகின் பல்வேறு நாடுகளிலும் கொவிட் தொற்றால் உயிரிழப்போர் எண்ணிக்கை குறைந்து வருகிறது. ஆனால் பல நாடுகள் தற்போது புதிதாக கொவிட் அலைகளையும், உயிரிழப்பையும் சந்தித்து வருகின்றன. குறிப்பாக, குறைவான அளவு தடுப்பூசி செலுத்திய மக்கள் இருக்கும் நாடுகளில் உயிரிழப்பு அதிகரித்து உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

**(அரசாங்க தகவல் திணைக்களம்)**

# பாராளுமன்ற உறுப்பினர் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழப்பு

**பிரித்தானியாவின் கொன்சர்வேடிவ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் டேவிட் அமேஸ் கத்திக் குத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.**

**பாராளுமன்ற உறுப்பினர் தமது தொகுதி மக்களுடனான வழக்கமான கலந்துரையாடலின் போது, இளைஞர் ஒருவர் அவர் மீது கத்திக் குத்து தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.**

**அவர் உடனடியாக வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.**



**பிரித்தானியாவின் நேரப்படி வெள்ளிக்கிழமை பகல் 12 மணி அளவில் இந்த கத்திக் குத்து சம்பவம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.**

**குறித்த சம்பவம் தொடர்பில் இளைஞன் ஒருவன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.**

# சீனாவில் லிங்க்ட்இன் சேவையை நிறுத்த மைக்ரோசொப்ட் முடிவு




வேலை வாய்ப்புகள் சார்ந்த சமூக ஊடகமான "லிங்க்ட்இன்" சேவையை, சீனாவில் நிறுத்தப் போவதாக, அதை நடத்தி வரும் மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிவித்துள்ளது.

"தொழில்நுட்ப நிறுவனங்கள் மீதான கட்டுப்பாட்டை சீனா கடுமை யாக்குவதால், இந்த முடிவுக்கு வந்திருப்பதாக மைக்ரோசொப்ட் தெரிவித்துள்ளது. சீனாவில் கடந்த 2014ம் ஆண்டில் மைக்ரோசொப்ட் நிறுவனம் லிங்க்ட்இன் சேவையை துவக்கியது. இந்நிலையில், அரசு அண்மைக்காலமாக பல்வேறு கட்டுப்பாடுகளை கொண்டுவருவதை அடுத்து, லிங்க்ட்இன் தன்னுடைய சேவையை நிறுத்திக் கொள்ளும் முடிவுக்கு வந்துள்ளது.

இது குறித்து, தொழில்நுட்ப பகுப்பாய்வு நிபுணர் ஒருவர் கூறியதாவது: சீன அரசு அதன் மீதான விமர்சனங்களை இலகுவாக எடுத்துக்கொள்ளாமல், மிகவும் சீரியஸாக எடுத்துக்கொண்டு விடுகிறது. அதனால், இத்தகைய தகவல் பரிமாற்றங்களை நிறுத்த கடுமையான முயற்சிகளில் இறங்கி விடுகிறது. இந்நிலையில், லிங்க்ட்இன் போன்ற தகவல் பரிமாற்ற தயாரிப்புகளை சீனாவில் வெளியிடுவது என்பது சிரமமானதாக உள்ளது.

இந்த தகவல் யுகத்தில் நீங்கள் எவ்வளவுக்கு எவ்வளவு தகவல்களை கட்டுப்படுத்த முனைகிறீர்களோ, அவ்வளவுக்கு மக்கள் அதை அடைய ஆக்கப்பூர்வமாக முயற்சிப்பார்கள் என்பதை சீன அரசு உணர வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். "பேஸ்புக்" மற்றும் "டுவிட்டர்" ஆகியவை சீனாவில் தடை செய்யப்பட்டு, பத்து ஆண்டுகளுக்கு மேலாகிவிட்டது. "கூகுள்" நிறுவனம் 2010ல் சீனாவை விட்டு வெளியேறிவிட்டது. இப்போது லிங்க்ட்இன்.